## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

தமிழ் சலவைக்கு மிக்க வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். பாவித்த வெற்றுறை ஒன்றை அனுப்பி எமது வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்க வைற் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 3520

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Franco Nero
in
TEXAS ADDIOS
(Cinemas cope)

தினசரி பி.ப: 2-00, 9-45
ஜெமினி—ஜமுனா
நடித்த
நல்ல தீர்ப்பு

### விற்பனைக்கு

புத்தகம்:
'கணித விஞ்ஞான வாய்பாடுகள்' திருத்திய இரண்டாம் பதிப்பு - இதில் அலகுகள், அலகு மாற்றம், சூத்திரங்கள், அட்டவணைகள், திரிகோண கணித வாய்பாடுகளுடன் CGE. வகுப்பில் எண்கணிதம், தூய கணிதம், பௌதிகம், இரசாயனம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் படிக்கும் மாணவர்களுக்கு முக்கிய குறிப்புகள் யாவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விற்பனை உரிமையாளர்கள் தனலக்குமி புத்தகசாலை சுன்னாகம். விலை ரூபா 1-90. 3502

மோட்டார் உதிரிப்பாகம் விற்பனை நிலையமொன்றிற்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை. முழுவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3543, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3543

இருபாலைச் சந்திக்கருகாமையில் - கோண்டாவில் பழம் ரோட் முகப்புடைய முப்பது (30) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பத்துப் பரப்பு துண்டுகளாகவும் விற்கப்படும். 38 கல்லூரி வீதி, நீராவியடியில் தொடர்பு கொள்ளவும். 3319

### விற்பனைக்கு

ராதா பல்வலி மருந்து: பல்வலிக்கு உடன் நிவாரணமளிக்கும். அபாயமான நச்சு மருந்துகள் எதுவும் சேர்க்கப்படவில்லை. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 160 செட்டியார் தெரு கொழும்பு. 3523

### தேவை

பாண் வேலை செய்வதற்கு [பேக்கர்] உடனே ஆட்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும் சமையல்காரரும் தேவை. நேரில் வரவும். பஸ்ரியன் பேக்கரி மானிப்பாய். 3547

பழைய பித்தளை அலுமினியம் பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும், தொடர்பு கொள்ளவும். சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3538

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
SODOM and COMORRAH

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
கூண்டுக்கிளி

வெல்லிசினிமா
மானிப்பாய்
பி.ப 2-30, 6-30, 10-00
என். எம். கண்ணப்பா-
வி.என் ஜானகி - நம்பியார்
நடித்த
தேவகி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு காலை 10-30
பம்பாயில்
சி. ஐ. டி. 555
(தமிழ்)


'லலா' சோப்பினரின்

## மின்னொளியில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
ஆச்சுவேலி வடக்கு அந்தோனியார் கோவிலுக்கு அருகாமையில் மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவிருக்கிறது. லலா சோப் ஸ்தாபனத்தார் இச் சுற்றுப் போட்டியை நடாத்துகின்றனர். 40 விளையாட்டுக்கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்கின்றன. இன்று இரவு 7 மணிக்கு இளையாணன் விளையாட்டுக்கழகமும் (ஏ) காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் (பி) மோதும்.

## 'சுகமான வாழ்வுக்கு விளையாட்டு'

குருநகர், சனி
"விளையாட்டுத் துறையின் மூலம் மனிதப் பண்பையும் ஒற்றுமையையும் சுகமான வாழ்வையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதனால் தான் விளையாட்டுத்துறைக்கென அரசாங்கம் ஒரு அமைச்சையே நிறுவியிருக்கின்றது. ரோமத்துக்கு கிராமம் சமூகத்திற்குச் சமூகம் இனத்திற்கு இனம் வேறுபடும் இலங்கை சினேக மனப்பான்மைகளையும் மனிதப் பண்பையும் வளர்ப்பதற்கு விளையாட்டு மிக முக்கியமான கருவியாகும்."

இவ்வாறு குருநகர் புனித ஆரோக்கியநாதர் சனசமூக நிலையத்தின் வருடாந்த விழாவின் விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவிற்கு தலைமை தாங்கிய மாநகர 5-ம் வட்டார உறுப்பினர் எஸ். ஜே. அன்ரனி குறிப்பிட்டார்.

24 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி 3 மைல் நீச்சல் போட்டி 12 மைல் மரதன் ஓட்டம் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை இவ் விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வீ. நடராசா வழங்கினார்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 21-ம் திகதி
(6-9-71)

மேஷம்- கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராயபேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

ரிஷபம்- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். பெரியோர் ஆசியும் ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்: கன்னல்போல இனிக்கும் வாழ்க்கை காதலில் வெற்றியுண்டு. பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும்.

கடகம்- கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய பேதம் ஏற்படும். கடன் தொல்லை அதிகரிக்கும். மௌனம் நன்மைதரும்.

சிம்மம்- தேறுதல் சம்பவங்கள் நடைபெறும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான தினம்.

கன்னி- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியின் உயர்வும் கிடைக்கலாம்.

துலாம்- எதிர்பாராத விளைவுகள் மூலம் செலவினங்கள் அதிகமாகும். கிளர் வாழ்க்கையில் கடன் படவும் நேரிடும். பிணிக்கு இடம்கொடாது இருக்கவும்.

விருச்சிகம்- தன்பத்தின் சாயல் மனதிலே படியும். புண்ணுத்தரைகளால் மனது புண்படும். சிறிய விபத்திற்கு கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும்.

தனுசு- பிரயாணத்தில் பொருள் தழுவக்கூடும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

மகரம்- திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவார்த்தையின் மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்ளுவீர்கள்.

கும்பம்- சுறுசுறுப்புக் குன்றும், உமது சொந்தவாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். குடும்பத்திலும் பூசல் தோன்றிமறையக் கூடும்.

மீனம்- வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்கும் பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மரவள்ளித் தொழில்

கோகிலை, ஞாயிறு
இலங்கையில் மரவள்ளித் தொழிலை விருத்திசெய்ய மற்கு உதவியளிக்க மேற்கு ஜெர்மனி முன்வந்துள்ளது.
மேற்கு ஜெர்மன் நெக்சேர்ஸ் ஸ்தாபனமே மேற்படி உதவியை அளிக்கவிருக்கிறது. மரவள்ளிச் செய்தொழிலை இங்கு அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவு தொகை மரவள்ளிக்கிழங்கையும் மரவள்ளிக்கிழங்கு பயிர்பண்ணுபவர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு இந்த ஸ்தாபனம் தயாராகவிருக்கிறது. இத்துடன் மரவள்ளிச் செய்கையாளர்க்கு இலவச ஆலோசனைகளையும் புதிய முறைகளையும் சொல்லிக்கொடுக்கவும் இது முன்வந்துள்ளது.


3-வது ஜனத்திரள் வாரம்

வெலிங்டன் (யாழ் நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 10-00 மணி.

லிடோ (யாழ்.நகர்)
(காலை 10-30 மட்டும்)

மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா
திரைகளில்



நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன்
நடித்த
தெய்வ மகன்

லிடோ [யாழ்நகர்]
தினசரி பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
திலிப்குமார் - வைஜயந்திமாலா
நடித்த
மதுமதி
(ஹிந்திச் சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன் - காஞ்சனா
நாகேஷ் - மனோகர் நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நாலும் தெரிந்தவன்

வின்சர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
சங்கமம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10 - 30 பிற்பகல் 2 - 30 மாலை 6 - 30
இரவு 10மணிக்கு

பின்னணிப் பாடகர்கள்
ரி. எம். சௌந்தரராஜன்
ஏ. எல். ராகவன்
ராஜ்ஸ்ரீ-விஜயகுமாரி-நாகேஷ்

ரி. எம். சௌந்தரராஜனின் இனிய பாடல்கள்
நிறைந்த ஒப்பற்ற ஒவியம்



ஐரிஷ்—வடஅயர்லாந்து எல்லையில்

# ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்த ஐரிஷ் பிரதமர் யோசனை

## பூசல்களைத் தவிர்க்கமுயற்சி

லண்டன், செப். 5

வட அயர்லாந்துக்கும் ஐரிஷ் குடியரசுக்குமிடையிலான எல்லையில் ஐ.நா.பார்வையாளர்களை நிறுத்தவேண்டும் என்று ஐரிஷ் குடியரசுப் பிரதம மந்திரி திரு.லிஞ்ச் யோசனை தெரிவித்திருக்கிறார்.

இதற்காக பிரிட்டனும் ஐரிஷ் குடியரசும் கூட்டாக பாதுகாப்பு சபையில் கோரிக்கை விடவேண்டும் என்றும் அவர் கருதுகிறார்.

திங்கிகிழமையன்று திரு.லிஞ்ச் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹீத்தைச் சந்திக்கும் பொழுது இந்த யோசனைபற்றி அவருடன் பேசுவார் என்று தெரிகின்றது. வட அயர்லாந்தில் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் நடைபெற்று வரும் இனக்கலவரங்களின் காரணமாக ஐரிஷ்-வட அயர்லாந்து எல்லையிலும் அவ்வப்போது பூசல்கள் ஏற்பட்டு வருகின்றன. சமீபத்தில் வடஅயர்லாந்தில் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் படை பொன்று தவறுதலாக ஐரிஷ் குடியரசுக்குள் நுழைந்தபோது அவர்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் கொல்லப்பட்டார் இன்னொருவர் படுகாயமுற்றார். இதற்குப் பின்னரும் சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளன

எல்லைப் பகுதியில் காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஐரிஷ் குடியரசுப் படையினர் எல்லைப்பாதுகாப்புப்பற்றி திருப்திஅடைந்திருக்கிறார்கள் என்றாலும், நிலைமையை சர்வதேசக் கண்காணிப்பில் வைத்திருக்க ஐ நா பார்வையாளர்களை எல்லையில் நிறுத்துவது நல்லதென ஐரிஷ் குடியரசுப் பிரதமர்; திரு லிஞ்ச் விரும்புவதாகத் தெரிகின்றது.

### செஞ்சிலுவை சங்கம் நடத்தும் ஆய்வு

வட அயர்லாந்தில் ஏற்பட்டுவரும் சம்பவங்கள் குறித்து ஆய்வுநடத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு தூதுக்குழுவை வட அயர்லாந்துக்கு அனுப்பவிருக்கிறது. இன்னும் சில வாரங்களில் இந்தக் குழு ஜெனிவாவிலிருந்து வட அயர்லாந்துக்குச் செல்லும். வட அயர்லாந்தில் ஆய்வுகள் நடத்தியபின்னர் இக்குழுவினர் ஐரிஷ் குடியரசுக்கும் விஜயம் செய்வார்கள்.

வடஅயர்லாந்தில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதே பொருத்தமாகும் என்று பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் தொழிற்கட்சிப் பிரதமருமான திரு ஹெரால்ட் வில்சன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

### குண்டு வெடித்தது

வடஅயர்லாந்து லண்டன்டெரி நகரத்தில் நேற்று கட்டிடமொன்றில் குண்டு ஒன்று வெடித்தபோது ஒரு பையன் கடுமையாகக் காயமுற்றான். காலியான இந்தக் கட்டிடம் ராணுவம் தங்குவதற்கு முன்பு உபயோகிக்கப்பட்டு வந்தது. பெல்பாஸ்ட் நகரில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் இரண்டு பெண்கள் காயமுற்றனர்.

எகிப்து சதிவழக்கில் எதிரிகள் 9 பேருக்கு

## மரணதண்டனை விதிக்க கோரிக்கை

கெய்ரோ, செப். 5

எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரிக்கப்பட்டு வரும் 12 பேரில் 9பேருக்கு மரணதண்டனை விதிக்கும்படியும் மற்றவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கும்படியும் அரசாங்க தரப்பு வழக்கறிஞர் நேற்று நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

இந்த 9 பேரில் பழைய உப ஜனாதிபதி அலிசப்றியும் ஒருவர் எதிரிகள் அனைவரும் தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

### முடிவு இல்லை

லண்டன், செப். 5

சர்வதேச நாணய நெருக்கடி சம்பந்தமாக ஆலோசிக்கக்கூடிய 10 தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பிரதிநிதிகள் எதுவித தீர்மானமும் எடுக்காமல் கூட்டத்தை முடித்துக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் ஜப்பானும் கலந்துகொண்டது.

### சீனாவிடமிருந்து 100,000 தொன் அரிசி

கோட்டை, ஞாயிறு

100,000தொன் அரிசியை இலங்கை சீனாவிடமிருந்து வாங்கவிருக்கிறதென உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்ன தெரிவித்துள்ளார்.

10 வருடங்களில் கொடுக்கத்தக்க வகையில் வட்டியில்லாக் கடன் மூலம் இந்த அரிசி பெறப்படுகிறதெனவும், சீனாவுடன் செய்து கொண்டுள்ள றப்பர்-அரிசி ஒப்பந்தத்திற்கு இந்தக் கடன் புறம்பானதெனவும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளர் டாக்டர் ஜே. பி கெலகம தெரிவித்துள்ளார்.

# பொது மன்னிப்புஅளிக்கிறர் ஜெனரல் யாஹ்யாக்கான்

புதுடில்லி, செப். 5

கிழக்குப் பாகிஸ்தான் கலவரங்களில் ஈடுபட்டவர்களில் ஒரு பகுதியினருக்கு மன்னிப்புவழங்கப் போவதாக ஜெனரல் யாஹ்யாகான் அறிவித்துள்ளார்.

கலவரங்களில் ஈடுபட்டதாகக்குற்றஞ்சாட்டப்பட்ட ராணுவ பொலிஸ், மற்றும் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குஇந்த மன்னிப்பு வழங்கப்படும்.

கிரிமினல் குற்றங்களுக்குள்ளானவர்கள் தேசிய பிராந்தியசட்டசபை உறுப்பினர்களில் சிலர் போன்றவர்களுக்கு இந்தமன்னிப்பு கிடையாதென்று தெரிகின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் சாமூக நிலைமையை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் இன்னொருநடவடிக்கை இது வெனக்கருதப்படுகின்றது.

இதேவேளையில் வெளிநாடுகளிலுள்ள பாகிஸ்தான் தூதரகங்களில் பணிபுரியும் சகல ராஜியப் பிரதிநிதிகளை தங்களது பாஸ்போர்ட்டுகளை அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு முன்பதாக தாங்கள் பணிபுரியும் தூதரகத்தின் தலைவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று யாஹ்யாகானால் கோரப்பட்டிருக்கிறது.

கிழக்குப்பாகிஸ்தானில் விடுதலைப்படையினர் தற்கொலை அணிகளை பயிற்றுவித்து வருவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

### பூட்டோ எச்சரிக்கை

இதேசமயம் "காலம்அதிவேகமாகக் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சியை முற்றாக ஒப்படைத்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கட்சியின் தலைவர் திரு. சுல்பிகார் அலிபூட்டோ யாஹ்யாகான் ஆட்சிக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

ஏதாவது நன்மை பயக்கக்கூடியது எனக்கண்டாலன்றி யாஹ்யாகானுடன் தாம் நடத்தப்போகும் அடுத்த பேச்சுவார்த்தைகள் இறுதியானதாகவே இருக்கும் என்று பூட்டோ தெரிவித்துள்ளார்.

### சைவத்தை வளர்க்க...

மாவிட்டபுரம், ஞாயிறு

சைவ சமயத்தை வளர்க்க நாடு பூராவிலும் மேடையேற்றக்கூடிய பிரமாண்டமான நாடகம் ஒன்றைத் தயாரிப்பதென மாவை முத்தமிழ் கலைமன்றம் முடிவு செய்துள்ளது

மேற்படி மன்றத்தின் 5 ஆண்டுத் திட்டங்களை பற்றி ஆராய நடந்த விசேட மகாநாட்டை பிரமஸ்ரீ க. து. சண்முகநாதக் குருக்கள் ஆரம்பித்து வைத்தார்.

திரு த. சிவலிங்கம் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் பல்துறையைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்துகொண்டு பல ஆலோசனைகளைத் தெரிவித்தனர்.

### ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

நெடுந்தீவு, ஞாயிறு

சுகாதார உதவி மந்திரி திருமதி சிவா ஓபயசேகரா நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு மின்சார ஒளியை ஏற்றி வைத்தார்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உதவி சுகாதார அமைச்சருடன் ஏனைய சுகாதார இலாகா அதிகாரிகளும் நெடுந்தீவுக்குச் சென்று அங்குள்ள வைத்தியசாலையைப் பார்வையிட்டனர்.

பிரிட்டன் விஜயத்தின் பின்

# அமெரிக்காவுக்கும் இந்திரா செல்வார்

புதுடில்லி, செப். 5

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிரிட்டன், அமெரிக்கா நாடுகளுக்கான பிரயாணத் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.

திருமதி காந்தி இம்மாதம் 29ந் திகதி பிரிட்டனுக்குப் போகிறார். பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத்தின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் அவர் அடுத்த மாதம் 3ந் திகதி வரை அங்கு தங்கியிருந்துவிட்டு அமெரிக்காவுக்குப் பிரயாணமாவார்.

பிரிட்டனில் பிரிட்டிஷ் தலைவர்களுடன் விசேஷமாகப் பிரிட்டிஷ் பிரதமருடன் உலக விவகாரங்கள் குறித்தும் வங்காள தேசம் பற்றியும் ஆலோசனைகள் நடத்துவார்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அளிக்கும் பட்டம் ஒன்றையும் அவர் ஏற்றுக்கொள்வார்.

பிரிட்டனில் தமது விஜயத்தை முடித்துக்கொண்டபின் அதிபர் நிக்ஸனின் அழைப்பின் பேரில் அமெரிக்கா செல்வார். முதலில் வாஷிங்டனுக்கும் பின்னர் நியுயோர்க்குக்கும் அவர் போவார். அங்கிருந்து வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் பிரதமர் இந்திரா விஜயஞ் செய்யவிருக்கிறார்.

ஆயுள்வேத திணைக்கள

அங்கீகாரமுள்ள

N.R. இன்டஸ்ரீஸ் தயாரிப்புகளான

சித்த மருந்துகள்

ஆயுள்வேத மருந்துகள்

எக்ஸ்ராக்ஸ் (EXTRACTS)

டிங்க்சேர்ஸ் (TINCTURES)

உள்ளூராட்சிமன்ற சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கும் வைத்தியர்களுக்கும் கிடைக்கும்,

விற்பனையாளர்: சுந்தரம் பிறதர்ஸ்,

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# "இன்ஸ்பெக்டர் செல்லையாவிடம் மோட்டார்சயிக்கில் வாங்கினேன்" —முதலாம் எதிரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமச்சந்திரன் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதாவது: கொலைச்சம்பவத்தின் பின் ஒருநாள் தவராசாவிற்கு தெரிந்தவரான நடராசா என்பவர் என்னை கரவெட்டியிலுள்ள எனது கடையில் வந்து சந்தித்தார். அவர் சாராயப் போத்தலும் இறைச்சியும் முட்டையும் ரொட்டியும் கொண்டுவந்தார். செல்வராசா என்பவரும் நடராசாவுடன் வந்திருந்தார். தவராசாவும் அவருடன் வந்திருந்தார். ஆனால் தவராசா நடராசாவையும் சாராயப்போத்தலையும் விட்டுவிட்டு சென்றுவிட்டார். நடராசா எனக்கு சாராயம் தந்தார். நான் குடித்தேன். அதன்பின் நாங்கள் சாப்பிட்டோம், பின் மூவரும் ஒரு படத்திற்குச் சைக்கிளில் சென்றோம். பருத்தித்துறை சென்றல் தியேட்டரில் 6-30 மணி படம் பார்த்தோம்.

### கொலைசெய்யும் திட்டம்

நாங்கள் தியேட்டரிலிருந்து வெளியில வந்ததும் நடராசா மீண்டும் என்னுடன் காக்காவை கொலை செய்வதுபற்றி கதைத்தார். கொலைசெய்வதற்கான திட்டம் தவராசாவினால் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் என்னிடம் சொன்னார். இறந்தபின் நாங்கள் சந்தோஷமாக வாழலாம் என்றும் அவர் தெரிவித்தார். நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் ஒன்றும் கதைக்கவில்லை. இதைச் செய்யாவிட்டால் என்னை கரவெட்டியில் இருக்கவிடப்போவதில்லை என நடராசாவும் செல்வராசாவும் பயமுறுத்தினார்கள். என்னைப் பயமுறுத்தியபின் நடராசா என்னிடம் கத்தியைத்தந்து காக்கா கடைக்குச் செல்லுமாறு கூறினார்.

### கத்தியுடன் சென்றேன்

நான் கத்தியுடன் ரோட்டில் சென்றுகொண்டிருந்தேன். நான் வருவதைக் கண்ட காக்கா என்னை அழைத்தார். நான் கடைக்குள் சென்றேன். நான் இரவு போசனத்தை முடித்துவிட்டேனா எனக் காக்கா கேட்டார். நான் சாப்பிடவில்லை என்று சொன்னேன். அவர் பணம் வேண்டுமா என்று என்னிடம் கேட்டபோது நான் என்னிடம் பணம் இருப்பதாகத் தெரிவித்தேன். சாப்பிட்டபின் திரும்பி வருவதாகவும் கடையை மூடவேண்டாமென்றும் காக்காவிடம் சொன்னேன். நான் சிறிஸ்

## பருத்தித்துறை கொலை வழக்கு

கபேக்கு வந்தேன். நடராசாவும் செல்வராசாவும் அங்கு இருந்தார்கள். இதைச் செய்யாவிட்டால் கரவெட்டியில் இருக்கவிடமாட்டோம் என்று மீண்டும் அவர்கள் பயமுறுத்தினார்கள். நான் சிறிஸ் கபேயில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு திரும்பவும் காக்கா கடைக்கு வந்தேன். இரவு 10-15 மணிக்கு நான் சாப்பாட்டை முடித்துக்கொண்டேன். நான் காக்கா கடைக்குச் சென்றபோது காக்கா கடைவாசலில் நின்றுகொண்டிருந்தார்.

நான் காக்கா கடைக்குச் செல்லுமுன் நடராசாவும் செல்வராசாவும் காக்கா மேல்மாடிக்குச் சென்றபின் கடை முன்வாசலை திறந்துவிடும்படி கூறினார்கள். இச்சம்பவத்தில் தாங்களும் கலந்துகொள்வதாகவும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

### வாசல் கதவை பூட்டவில்லை

அவர் தெரிவித்தபடி நான் வாசல்கதவைப் பூட்டவில்லை. நான் மேல்மாடிக்குச் சென்றேன். காக்காவும் நானும் கதைத்துக்கொண்டிருந்தோம். அதன் பின் காக்கா நள்ளிரவு 12 அல்லது 1 மணி போல் படுத்துக்கொண்டார். அவர் படுத்ததும் நான் கத்தியால் குத்தினேன். நான் முதலில் குத்தியபோது காக்கா குனிந்தார். மூன்றுதடவை குத்தியபின் காக்கா சரிந்துவிட்டார். அவர் இறந்துவிட்டதாக நான் கருதினேன். மதகடியில் மறைந்திருந்த நடராசாவிடமும் செல்வராசாவிடமும் அவர்கள் சொல்லியபடி செய்துவிட்டதாக மேல்மாடியிலிருந்து கூறினேன். அதன்பின் நான் காக்கா கிடந்த இடத்திற்கு வந்தேன். காக்கா என்மீது பாய்ந்து எனது காலைப் பிடித்து என்னை விழுத்த இழுத்தார். நான் கீழே விழுந்தேன். காக்கா என் கையிலிருந்த கத்தியை பறிக்கப் பார்த்தார். நான் காக்காவின் பிடியிலிருந்து விடுபட்டுக்கொண்டு அவர் என்னைக் குத்திவிடுவார் என நினைந்து அவரைப் பல தடவை குத்தினேன்.

### இரத்தம் பீறிட்டது

காக்காவின் உடலிலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தபோது நான் கீழ்மாடிக்குச் செல்ல ஆயத்தமானேன். காக்கா இறந்ததும் நான் கீழ்மாடிக்கு வந்தேன். நான் முன்கதவால் எட்டிப் பார்த்தேன். நான் செல்வராசாவையும் நடராசாவையும் காணவில்லை நான் சோக்கேஸின் ஒரு கண்ணாடியை உடைத்தேன் அதில் இருந்த 5 அல்லது 6 தாலிக்கொடிகளையும், 5 தங்கச்சங்கிலிகளையும், 15 அல்லது 16 ஜிப்சின் ஆகியவற்றை எடுத்தேன். நான் எனது சேட்டைக் கழற்றி அதற்குள் நகைகளைக் கட்டினேன், காக்கா மேல்மாடியில் எனது காலைப் பிடித்து இழுத்தபோது எனது சாரம் உரிந்து இரத்தவெள்ளத்தில் விழுந்தது நான் சாரத்தை அங்கேயே விட்டுவிட்டேன்

### லாச்சியில் பணமில்லை

நான் நகைகளை எடுக்குமுன் காக்காவின் டிரங்குப் பெட்டிகளில் ஒன்றைத் திறந்து சாரம் ஒன்றை எடுத்து உடுத்திக்கொண்டேன். பணத்தை எடுக்கும்படி அவர்கள் கூறினார்கள் பணம் லாச்சியிலிருக்குமென்றும் அவர்கள் என்னிடம் கூறினார்கள் நான் லாச்சியைத் திறந்தேன் ஆனால் லாச்சியில் பணமில்லை அதன் பின்னர் நான் நான் சோக்கேஸ் கண்ணாடியை உடைத்து நகைகளை எடுத்தேன்.

### ரோட்டில் ஒருவருமில்லை

அந்த நேரம் நல்லாய் மழை பெய்துகொண்டிருந்தது வீதியில் ஒருவருமில்லை நான் முன்கதவைத் திறந்தபோது அக்கதவின் திறப்பு முன்கதவிலிருந்தது முன்பக்கத்திலிருந்து கதவைப் பூட்டுவதற்காக நான் திறப்பை எடுத்தேன் கண்ணாடியை உடைப்பதற்கு முன்னரே இத்திறப்பை எடுத்தேன் நகைகளைக் கட்டும்போது நான் திறப்பையும் அதற்குள்போட்டுவிட்டேன் நான் வெளியில் வந்தபோது மழை பெய்துகொண்டிருந்தது. மழையில் நனைந்தபடி 4 மைல் கரவெட்டிக்கு நடந்து வந்தேன் எனது கடைக்கு வந்தபோது நடராசாவும் செல்வராசாவும் அங்கிருந்தார்கள். அதிகாலை 3 மணிக்கு எனது கடைக்கு வந்தேன். அவர்கள் பெரிய வாளி ஒன்றில் தண்ணீர் கொண்டுவந்தார்கள் என்னைக் கழுவிக்கொள்ளுமாறு அவர்கள் கூறினார்கள் எனது சாரத்தையும் சேர்ட்டையும் செல்வராசாவும் நானும் அருகில் உள்ள இடத்திற்கு எடுத்துச்சென்று மண்ணெண்ணெய் ஊற்றி எரித்தோம்.

### கத்தியை உடைத்தேன்

கத்தியை வைத்திருந்தால் ஆபத்தில் சிக்கவேண்டிவருமென்றும் அதைக் கைவிடும்படியும் அவர்கள் தெரிவித்தனர் அதனால் நான் கத்தியை எடுத்துச் சென்று என் பட்டடையில் அதைத் துண்டுகளாக உடைத்துவிட்டேன் அத்துண்டுகளை மறுநாள் யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் சென்றபோது ஒவ்வொன்றாக எறிந்தேன் அன்றிரவு நான் வீட்டிற்குச் சென்றபோது நடராசாவும் செல்வராசாவும் தங்களின் பாதுகாப்புக்காக ஒவ்வொரு சங்கிலியை எடுத்

## "காக்காவைபலதடவை குத்தினேன்"

துச் சென்றார்கள் அப்படியே நகைகளாக விற்றால் மாட்டிக்கொள்ளநேருமென்றும் எல்லா நகைகளையும் உருக்கியபின் விற்கும்படியும் அவர்கள் என்னிடம் கூறினார்கள் மறுநாள் நான் எல்லாத் தாலிக்கொடிகளையும் சங்கிலிகளையும் ஜிப்சிகளில் சிலவற்றையும் உருக்கினேன். பவுனில் ஒரு சிறு பகுதியை தரகர்மூலம் விற்பனை செய்தேன் அது ஆறு அல்லது ஏழு பவுண் நிறையிருந்தது எனக்கு தரகரை தெரியாது பவுண் விற்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு என்னுடன் நடராசாவும் செல்வராசாவும் வந்தனர்

### ரேடியோ வாங்கினோம்

ரேடியோ ஒன்று வாங்குவதற்கு நாங்கள் ரேடியோ கடை ஒன்றுக்குச் சென்றோம். அந்த ரேடியோ வாங்குவதற்கு போதிய பணம் எங்களிடம் இல்லை அந்த ரேடியோவின் விலை 700 ரூபாவாக இருந்தது. அதனால் நாங்கள் ரேடியோவை வாங்கவில்லை. தனக்கு தேவையான எல்லாவற்றையும் வாங்குவதற்கு தனக்குப் பணம் தேவை என்று நடராசா கூறினார். நாங்கள் திரும்பவும் கரவெட்டிக்கு வந்தோம். அன்று சாயந்தரம். நாங்கள் உருக்கிய பவுண் துண்டை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றோம். ஒரு தரகர் மூலம் அப்பவுண் துண்டைவிற்றுரேடியோவை வாங்கினோம். சுபாஸ் கபேயில் மாலை 5 மணிக்கு எங்கள் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டோம். அதன்பின் கரவெட்டிக்குச் சென்றோம் நடராசா ரேடியோவை தனது வீட்டுக்கு கொண்டுசென்றார். செல்வராசாவும் தனது வீட்டுக்குச் சென்றார் சம்பவத்தின் பின் சில நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தேன் ஒருமாதத்தின் பின் நடராசாவும் தவராசாவும் என்னை மாவிசந்தையில் சந்தித்து பணம் முழுவதையும் தரும்படி பயமுறுத்தினார்கள் அதன்பின் அவர்கள் சென்றுவிட்டனர்.

### பணம் தரும்படி பயமுறுத்தல்

இச்சம்பவத்தின் பின் கரவெட்டியில் உள்ள எனது கடையில் படுப்பதற்கு தேவராசா அடிக்கடி வருவது வழக்கம். ஒருவாரத்தின்பின் தவராசா தனியாக கடைக்குவந்தார். முழுப் பணத்தையும் அல்லது பவுனையும் தன்னிடம் தரும்படி பயமுறுத்தினர். நான் பணத்தையோ, பவுனையோ அவரிடம் கொடுக்கவில்லை. பின் அன்றுபின் நேரம் தம்பிராசா என்பவர் என் கடைக்கு வந்தார். எனக்கு சில ஆபத்து இருப்பதாக அவரிடம் கூறினேன். அது பற்றி தனக்கெல்லாம் தெரியுமென்று தம்பிராசா கூறினார். கரவெட்டியில் இருப்பது ஆபத்தென்றும், அவர் கூறி என்னைக்கண்டிக்கு கூட்டிச்சென்றார் தம்பிராசா. திருஞானம் ஆகியோருடன் கண்டிக்குச் சென்றேன் 16பவுண் நிறையுள்ள உருக்கிய துண்டையும் கண்டிக்கு எடுத்துச் சென்றேன் மிகுதிப் பவுனை கடையில் வைத்துவிட்டுச் சென்றேன் கண்டிக்குச் சென்று செல்வா என்பவரின் வீட்டில் தங்கினோம். அங்கு ஓர் இரவு தங்கினோம்மறுநாள், எனக்கு விருப்பமானால் கண்டியில் ஒருகடை நடத்தலாம். என்று தம்பிராசா கூறினார், நான் கண்டியில் இருக்கச் சம்மதித்தேன்.

### பவுண்துண்டு மறைந்தது


நாங்களும் செல்வாவும், கடையொன்றைப் பார்க்கச் சென்றோம். கடைக்கு முற்பணம் தேவையானபடியால் ஒரு பவுண்துண்டை விற்பதற்கு தம்பிராசாவிடம் கொடுத்தேன். திருஞானத்தையும் அவருடன் அனுப்பினேன். என்னிடம் மற்றொரு பெரிய பவுண்துண்டு இருந்தது. என்னிடமிருந்த பெரிய துண்டு காணாமல் போனது. தம்பிராசா தான் அதனை எடுத்திருக்கவேண்டுமென நினைத்தேன் அதன் பின் தம்பிராசாவையோ, திருஞானத்தையோ கண்டியில் காணவில்லை தம்பிராசாவின் சேட்டு எனது சூட்கேசில் இருந்தது என்னிடமிருந்த 10 ரூபாவைக் கொண்டு கரவெட்டிக்கு வந்துசேர்ந்தேன் நான் வந்து 15 அல்லது 20 நாட்களுக்குப்பின் திருஞானம் எனதுகடைக்கு வந்தார். தம்பிராசாவுடன் சேர்ந்து கொண்டு எதற்காக எனது பவுனை எடுத்துச்சென்றீர் என்றுதிருஞானத்திடம்கேட்டேன். தம்பிராசாவால் தான் பயமுறுத்தப்பட்டதாக திருஞானம் கூறினார்.

### தரகர் வந்தார்

எனக்கு ஒரு மோட்டார் சயிக்கிள் தேவையா என்று திருஞானம் என்னிடம் கேட்டார் சிலதேவன் என்ற ஒரு தரகரை திருஞானம் கூட்டிவந்தார். இரண்டு நாட்களுக்குபின் நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தோம் இன்ஸ்பெக்டர் செல்லையாவின் மோட்டார்

(6-ம் பக்கம் பார்க்க)


ராதா
குரு பற்பொடி
பற்களை வெண்மையாக்கி வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல், வாய்நாற்றம் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.
எங்கும் கிடைக்கும்.
ராதா குருபற்பொடி என்று கேட்டு வாங்குங்கள்.
தயாரிப்பாளர்கள்:
"ராதா புரடக்ஸ்"
ஏக விநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனைதிகள் வியாபாரம்.)
53, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 541
'பாலேந்திரா பில்டிங்'
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11



# யாழ்ப்பாண மக்களுக்கு

# பெருமையுடன் அறிவிக்கின்றேம்



## உங்கள் தேவைகள்
## இன்றே பூர்த்தி செய்யப்படும்

## மகத்தான திறப்பு விழா
## இன்று (6-9-71) காலை 11-00 மணிக்கு

# இராசமலர் களஞ்சியம்

**20/1, ஸ்டான்லி வீதி, - யாழ்ப்பாணம்.**

| | | |
|---|---|---|
| அச்சகப் பொருட்கள்<br>எழுதும் உபகரணங்கள்<br>பாடசாலை மாணவர்களுக்கு<br>வேண்டிய சகல கொப்பி<br>வகைகளும் | பெயின்ட், இரும்புச்<br>சாமான்கள், மோட்டார்<br>உதிரிப்பாகங்கள் மற்றும்<br>வீட்டுப் பாவனைப்<br>பொருட்கள் | தகரத்தில் அடைக்கப்பட்ட<br>உணவுப் பொருட்கள்<br>இனிப்பு வகைகள்<br>சொக்லேட்டுகள் மற்றும்<br>உணவு வகைகள் |
| மருந்து வகைகள்<br>கண்ணாடிப் பாத்திரங்கள்<br>மண்ணெண்ணை அடுப்புகள் | பெண்களின் அழகு சாதனங்கள்<br>குழந்தைகளுக்கு<br>தேவையான சகல<br>ஓடிக்குலோன், பவுடர்<br>மற்றும் பொருட்கள் | தையலுக்கு வேண்டிய<br>தையல் நூல்கள்<br>லேசுகள் |
| இன்னும் பல | இன்னும் பல | இன்னும் பல |

மேலை நாடுகளில் நன்கு அறிமுகமான

**"டிப்பார்ட்மென்டல் ஸ்டோர்"**

இன்று யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது

# இந்த நவீன களஞ்சியத்தின்
# அமைப்பைக் காண



வாரீர் வாரீர் வாரீர்

